**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.CC.182/2023**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | பழனியம்மாள் | Prosecution | LW-2 as PW-2 |
| Father Name | க/பெ. ஜெயபால் | Defence | |
| Village | பச்சைபெருமாநல்லூர் | Taluk | சீர்காழி |
| District | மயிலாடுதுறை | Age | 60/2025 |

Solemnly affirmed by Tmt.K. Geetha, Grade 3 bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day **21.08.2025.**

**சத்தியபிரமாணம் பெறப்பட்டது. எதிரி ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் மேற்படி முகவரில் வசித்து வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். தேதி மாதம் நினைவில் இல்லை. **2021** ம் ஆண்டு நானும் எனது மகளும் பேர குழந்தையுடன் வடகாலில் இருந்து தொடுவாய்நோக்கி எனது மகளின் இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தோம். அப்போது பைக்கில் எங்களை பின் தொடர்ந்து வந்த இரண்டு நபர்கள் ஹெல்மெட் அணிந்து கொண்டு பின்பக்கமாக எனது மகள் கழுத்தில் இருந்த தங்க செயினை அறுத்துக்கொண்டு நேராக தொடுவாய் நோக்கி வேகமாக சென்றுவிட்டார்கள். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. எனது மகளிடம் நகையை பிடுங்கி கொண்டு சென்றவர்களின் அடையாளம் எனக்கு தெரியாது. அங்கிருந்து நேரடியாக சீர்காழி காவல் நிலையம் வந்து புகார் கொடுத்தோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

ஆஜர் எதிரிதான் என் மகளின் நகையை பறித்தார் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரி எனது மகளின் நகையை பறிக்கவில்லை என்றால் சரிதான். எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரிதான்.

**எதிரி தரப்பில்குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது**

**மறுவிசாரணை இல்லை.**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.CC.182/2023**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | ரேணுகாதேவி | Prosecution | LW-1 as PW-1 |
| Father Name | ஜெயபால் | Defence | |
| Village | பச்சைபெருமாநல்லூர் | Taluk | சீர்காழி |
| District | மயிலாடுதுறை | Age | 39/2025 |

Solemnly affirmed by Tmt.K. Geetha, Grade 3 bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day **21.08.2025.**

**சத்தியபிரமாணம் பெறப்பட்டது. எதிரி ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் மேற்படி முகவரில் வசித்து மெடிக்கல் ஷாப் வைத்து வேலை செய்து வருகிறேன். கடந்த **24.02.2021** ம் தேதி இரவு சுமார் **7.30** மணிக்குமேல் நான்எனது அம்மா மற்றும் குழந்தையுடன் வடகாலில் இருந்து தொடுவாய்நோக்கி எனது இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தோம். அப்போது பைக்கில் எங்களை பின் தொடர்ந்து வந்த இரண்டு நபர்கள் ஹெல்மெட்ட் அணிந்து கொண்டு பின்பக்கமாக எனது கழுத்தில் இருந்த தங்க செயினை அறுத்துக்கொண்டு நேராக தொடுவாய் நோக்கி வேகமாக சென்றுவிட்டார்கள். ஆஜர் எதிரியை எனக்குதெரியாது. எனது நகையை பிடுங்கி கொண்டு சென்றவர்களின் அடையாளம் எனக்கு தெரியாது. அங்கிருந்து நேரடியாக சீர்காழி காவல் நிலையம் வந்து புகார் கொடுத்தேன். நீதிமன்றத்தில் தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் அதில் உள்ள விபரம் எனக்கு தெரியும். அந்த புகார் மனு அசாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. நீதிமன்றத்தில் தற்போது என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள நகை என்னுடையது தான். நான்அதனை மனு தாக்கல் செய்து பெற்றுக்கொண்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

ஆஜர் எதிரிதான் என் நகையை பறித்தார் என்றால் சரியல்ல. ஆஜர்

எதிரி எனது நகையை பறிக்கவில்லை என்றால் சரிதான். எதிரிக்கும்இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரிதான்.

**எதிரி தரப்பில்குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது**

**மறுவிசாரணை இல்லை.**